# அனுஷம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)

**1. கணபதி வழிபாடு**



பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ அனுஷம் சக்தி**

பரம கருணாம் பரம், தற்பதம்,

கனசொற்பதாதீதம், இன்ப வடிவம்

**3. திருப்பாவைபாசுரம் – 9 அனுஷம் இயல்பு**

தூமணிமாமடத்துச் சுற்றும் விளக்கெரிய

தூமம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்

மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்

மாமீர் அவளை எழுப்பீரோ உன்மகள்தான்

ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?

ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?

மாமாயவன் மாதவன் வைகுந்த னென்றென்று

நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/w0JPZrFVclw**

**விளக்கம் :**

அனுராதா அனைத்தையும் அறிந்தவர். அவள் ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ? என்ற கேள்விகள் பலவாய் பாசுரத்தில் பிரமிக்க வைக்கிறது. அனுராதா ஊமையும் அல்ல, செவிடும் அல்ல, அனந்தலும்

அல்ல, இரகசியத்தை காப்பாற்றும் வகையிலே ஊமையாகவும், தகாதவற்றை கேட்கும் வகையிலே செவிடாகவும், சாதனைகள் வெல்ல வேண்டும் என்பதிலே காலத்திற்கேற்ப அனந்தலாகவும் இருப்பதே அனுராதாவின் இயல்பு.

தூமணிமாடத்து சுற்றும் விளக்கெரிய அனைத்து ஆசிர்வாதங்களுடன் கருணையே வடிவாக தற்பதத்தை தன் நிலையை உலகறிய செய்பவளே அனுராதா. தற்பதம் தன்னுடைய நிலைபட்டு கண் வளரும் என்று குறிக்கப் பட்டுள்ளது. இந்த கண் வளர்ச்சி அறிவிப்பது கருணையின் ஆரம்பமாகும். கருணை ஆரம்பம் கருணாம்பரமாக அனுராதா சொல்லும் சொற்களெல்லாம் அர்த்தமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே தான் மாமன் மகளே என்று செல்லமாக அழைக்கப்படுகிறது.

அனுராதா நக்ஷத்ரத்தின் அருட்பெருஞ்ஜோதி கண் வழியாக கருணையை மலர செய்வது மேலும் இரக்கமுள்ள மனசுக்காரனாக இருக்கச் செய்வது உலக சாதனை ஆகும். மாமாயனை மயக்கிய ஊமையல்லவா அனுராதா பெருந்துயில் மந்திரம் எதுவென்று அலசி பார்க்கும் போது, அதுவே இங்கு மகாமந்திரம்.

**ராதேகிருஷ்ணா ராதேகிருஷ்ணா !**

**ராதேகிருஷ்ணா ராதேகிருஷ்ணா !**

உலகத்திற்கு பயன்படும் இந்த கருணை அனுஷம் உலக பொதுமறை

இயற்றிய திருக்குறளை எழுதிய திருவள்ளுவருக்கு சொந்தமாகும்.

எனவே நாமெல்லாம் உய்ய கருணையே வருக! கருணையே அருள்க! இதுவே நம் அனுராதா, அனுகிரகராதா, ராதே கிருஷ்ணா, ராதே கிருஷ்ணா, ராதே கிருஷ்ணா இதுவே இன்பம் வடிவம், பேரின்ப வடிவம்.
அனுஷமே வருக! அனுஷமே அருள்க!

இந்த அருட்பெருஞ்ஜோதிகள் பரம கருணாம்பரமாக, தற்பதமாக, அதீதமான சொல்லாதிக்கமாக, இன்பவடிவமாக தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும். எனவே கருணை பரம கருணாம்பரமாக வளரும் என்பதை கண் வளரும் என்று பதமாக சொல்லியிருக்கிறார்கள்.

இன்ப வடிவத்தை மாமன் மகளே என்று உரிமையுடன் வடித்துக் காட்டியிருக்கிறார்கள். மணிக்கதவம் தாள் திறந்து பேரின்பத்தை அடைய இன்ப அருளை பெற அனைத்து தகுதிகளும் அனுராதாவிற்கு உண்டு. இதுவே அனுஷம். இதுவே மனுஷம்.

அனுராதா பார்ப்பதற்கு ஊமை அல்ல, மாமாயனுடன் மொழி புகல வந்த மாமேதை . அனுராதா செவிடல்ல, மாதவனிடம் கேட்டுணறும் திருவளர்ச் செல்வி.

அனுராதா அனந்தல்ல, வைகுந்தனிடம் நடமாடும் வைகுண்டத்தை

பிரதிஷ்டை செய்ய தகுந்தவளே ஆவாள். இந்த நடமாடும் வைகுண்டமே ஏமப் பெருந்துயில் பட்டரையாக, என்றென்றும் நாம சங்கீர்த்தனமாக தற்பதங்களாய், சொற்பதங்களாய், நவின்ற வண்ணம் அதீத விளைவுகளை ஏற்படுத்தும். மொத்தத்தில் அனுராதா அனுஷத்தில் மனுஷம்.

**<u>4. வேதத்தில் அனுஷம் ஜோதிசக்தி</u>**

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

மித்ரதேயாயை வித்மஹே
மஹாமித்ராய தீமஹி
தேவ கருணா தீமஹி
தன்னோ அனுஷ ப்ரசோதயாத்;

கருணாம்பரமாய் திகழ்ந்திடுவாய்
காட்சிக்கு இன்ப வடிவானாய்
சோதனை தீர்க்க வல்லவனாய்
சோதரனானாய் நமோ நமோ:

அதீத ஆற்றல் கொண்டிருப்பாய்
அறிவுடன் சிறந்த குணங்களுடன்
தற்பதம் எனும் சிறப்புடனே
நட்புடன் திகழ்வாய் நமோ நமோ;

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. அனுஷம் கவிதை

செயற்படுங்பெருங்கருணையே நீ; இறைவனின் எதிர்பார்ப்பு
பனிப்பெருங்குருணியே நீ; பகலவனின் உதிர்பார்ப்பு
கனிப்பெருங்காருண்யமே நீ; மோட்சத்தின் வளைகாப்பு
சனிப்பெயர்ச்சி சொற்பதமே நீ; இரக்கத்தின் மாராப்பு

ராதா காதல் வராதா? அனுராதா உடன் வருமே!
மாதா குழப்பம் வராதா? அனுசொல் உடன் தேனே!
வாதா போர் வராதா? தற்பதம் உடன் வெண்புறாவே!
சாதா ரணம் வராதா? ராதா அனு உடன் பேரின்பமே!

காலமும் நேரமும் தூரமும் இன்ப வடிவமே
காலமே காட்சி கோலமே சாட்சி ஒலியும் ஒளியுமே
காலனை கரைக்க கனசொல் ஆறு ஒன்பது வாயிலே
கால்நாக்கு மேல்நோக்க, காற்றே நீ மரணமிலா கோயிலே

இரகசிய சிநேகிதனே! பெருங்கருணை அம்பலமே
இரகசிய எதிலும் எங்கும் ஏனென்று இரங்குவாயே
இரக்கம் நின்னியல்பே நோக்கம் கொண்டிரு
இரவுவரை ஆராவாரம் ஏன்? அலைச்சலும் ஏனோ?

தீராத வினைகள் நிறைந்த தருணங்கள்
ஏறாத விசைகள் பரந்த உலகங்கள்
மாறாத தற்பதத்தால் சொற்பதத்தால் இன்பம் நீயே
காராத கற்கண்டே குருதியிலா கருணை வடிவமே

சோம்பலில் நீயிருந்தால் உலகப்போர் நீடிக்கும்
ஆம்பலில் நீயிருந்தால் அழகுப்போர் சாதிக்கும்
சாம்பலில் நீயிருந்தால் சுடுகாடு போதிக்கும்

அடக்கத்தில் நீயிருந்தால் இடுகாடு எழுந்தாடும்

## 6. அபிராமி அந்தாதியில் அனுஷம் சக்தி

**மாயையை வெல்ல**

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து

நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்

பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?

தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

**எத்தகைய அச்சமும் அகல**

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத

வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்

கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்

செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.

**அறிவு தெளிவோடு இருக்க**

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்

கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும்; சமயம்

ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்

வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

**பக்தி பெருக**

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு

பூணேன்; உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்

பேணேன்; ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்

காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் அனுஷம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் ஸ்ரீதாய நம | – பணம் தரும் தனமே போற்றி |
| ஓம் ஸ்ரீஸாய நம | – தண ஆகர்ஷண ஆற்றலே போற்றி |
| ஓம் ஸ்ரீநிவாஸாய நம | – ஸ்ரீநிவாசனே பாவம் போக்கவே போற்றி |
| ஓம் ஸ்ரீநிதயே நம | – பாவம் பொசுக்கி மாற்றம் தருபவளே போற்றி |
| ஓம் ஸ்ரீவிபாவதாய நம | – நம்பி நல்லுறவுடன் ஆற்றல் தருபவனே போற்றி |
| ஓம் ஸ்ரீதராய நம | – தோற்றப்பொலிவு ஒளிவட்டமே போற்றி |
| ஓம் ஸ்ரீகராய நம | – அழகு, கவர்ச்சி ஆற்றல் பெற்றவனே போற்றி |
| ஓம் ஸ்ரேயஸே நம | – மூவுலகிலும் செல்லும் செல்வமே போற்றி |
| ஓம் ஸ்ரீமதே நம | – தாமரை கண்கள் தரும் சுகமே போற்றி |
| ஓம் லோகத்ரயாஸ்ராய நம | – அங்க லட்சணம் ஆயிரமே போற்றி |
| ஓம் ஸ்வக்ஷய நம | – சதா ஆனந்தமே போற்றி |
| ஓம் ஸ்வங்காய நம | – பேரானந்த பேரொளியே போற்றி |
| ஓம் ஸதாநந்தாய நம | – ஜோதிர்தியான ஆரம்பநிலையே போற்றி |
| ஓம் நந்யேத நம | – மனசாட்சியை வென்றவனே போற்றி |
| ஓம் ஜ்யோதிர்கணேஸ்வராய நம | – ஆயகலைகள் தாண்டிய அனுபவமே போற்றி |
| ஓம் விஜிதாத்மநே நம | – புகழேணியில் உள்ள உண்மை உழைப்பே போற்றி |
| ஓம் அவிதேயாத்மநே நம | – உள்ளங்கை நெல்லிக்கனியென ஆணைகளே போற்றி |
| ஓம் ஸத்கீர்த்தயே நம | – மனங்களை ஆளும் மன்னவனே போற்றி |
| ஓம் சிந்நஸம்ஸயாய நம | – சர்வமனங்கள் அறியும் இறை சக்தியே போற்றி |
| ஓம் உதீர்ணாய நம | – கண்ணன் கூட உனக்கடிமை போற்றி |
| ஓம் ஸர்வதஸ் சக்ஷுப்ஸே நம | – நிலையான அன்பே, மாற்றமிலா வெற்றியே போற்றி |
| ஓம் அநீஸாய நம | – சாதனைகளிலும் சுயநல சந்தோஷமே போற்றி |
| ஓம் ஸாஸ்வதஸ்த்திராய நம | – ராதையின் அலங்காரங்கள் அவதாரமே போற்றி |
| ஓம் பூஸயாய நம | – விநோதசகியே, விசித்ர அழைப்பே போற்றி |
| ஓம் பூஷணாய நம | – சோகங்களை மாற்றி சுகமளிப்பனே போற்றி |

| | |
|---|---|
| ஓம் பூதயே நம | – சூர்ய, சந்திர நக்ஷத்ர கிரகணங்களின் அன்பே போற்றி |
| ஓம் விஸோகாய நம | – தேவரும், தெய்வமும் வணங்கும் தூய அமுதே போற்றி |
| ஓம் ஸோகநாஸநாய நம | – அமிர்த கலசமே போற்றி |
| ஓம் அர்ச்சிஷ்மதே நம | – முக்குணங்களின் இன்ப வடிவமே போற்றி |
| ஓம் அர்ச்சிதாய நம | – நினைவிலேயே கண்ணன் அருள் அழைத்து தருபவளே போற்றி |
| ஓம் கும்பாய நம | – எதிரிகளால் வீழ்த்த முடியாத காதல் கனி ரசமே போற்றி |
| ஓம் விஸ்த்தாத்மநே நம | – ஈடு இணையில்லா போர் வீரனே போற்றி |
| ஓம் விஸோதநாய நம | – செல்வியென செல்வத்திற்கு மேலானவனே போற்றி |
| ஓம் அநிருத்தாய நம | – அறிவிற்சிறந்த அழகிற்கினிய அருங்கலமே போற்றி |

## 8. லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அனுஷம் சக்தி

வஜ்ரேச்வரீ வாமதேவீ வயோவஸ்தா விவர்ஜிதா
ஸித்தேச்வரீ ஸிவித்தவித்யா ஸித்தமாதா யசஸ்விநீ

விசுத்தி சக்ர நிலயா ரக்தவர்ணா த்ரிலோசனா
கட்வாங்காதி பிரஹரணா வதநைக ஸமன் விதா

பாயஸான்ன ப்ரியா த்வக்ஸ்தா பசுலோக பயங்கரீ
அம்ருதாதி மஹாசக்தி ஸம்வ்ருதா டாகினீச்வரீ

அநாஹதாப்ஜ நிலயா ச்யாமாபா வதனத்வயா
தம்ஷ்ட்ரோஜ்வலா க்ஷமாலாதிதரா ருதிரஸம்ஸ்திதா

காலராத்ர்யாதி சக்த்யௌக வ்ருதா ஸ்நிக்தௌதன ப்ரியா
மஹாவீரேந்த்ரவரதா ராகிண்யம்பா ஸ்வரூபிணீ

மணிபூராப்ஜ நிலயா வதனத்ரய ஸம்யுதா
வஜ்ராதிகாயுதோபேதா டாமர்யாதிபி ராவ்ருதா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் அனுஷம் சக்தி

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்

உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே

கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்

புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை

திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக

புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்

நின்நாமம் ஏத்துவதே நான்செய்யும் தவமாகும்

நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்

முருகா முருகா வென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்

உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்

அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா

முருகன் இலாவிட்டால் முவ்வுலக மேதப்பா

அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா

அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்

ஸ்தாவர ஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்

முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு

ஸ்கந்தாச்ரம மிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்

சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்

சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா

வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ

சந்தேஹ மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்

சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்

சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி அனுஷம் சக்தி

பாழ்வாழ்வு எனும்இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.(31)

கலையே பதறிக், கதறித் தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே, மலை கூறிடு வாகையனே.(32)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் அனுஷம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பாவ பிரியா | பாவ பிரியா | சுபபந்து வராளி | ஷாத்விதமர்கினி |

## 12. மூலமந்திரம்

அக்ஷயம், பரமம், பத்மம், ஜோதி ரூபம்ஜெனார்த்தனம்

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| மகிழம் | பூமருது | கொங்கு | தேக்கு |

## 14. பரிகாரம்

- அனுமன் கோயிலுக்குச் சென்று வடமாலை போடவும்.
- அனுமனுக்கு தாமரைப் பூக்களால் அர்ச்சனை செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு மகாலட்சுமிபுரீஸ்வரர் திருக்கோயில்,** திருநின்றியூர் - மயிலாடுதுறை.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra